தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம்

விருகம்பாக்கம் குருசேகரம்

கிறிஸ்துநாதர் ஆலயம்

விருகம்பாக்கம், சென்னை – 600 092

August & September 2026

"நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்;
நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய
மாளிகையுமாயிருக்கிறீர்கள்"

1 கொரிந்தியர் 3:9



அருட்பணி. D. ஜான் எர்னஸ்ட் டேவிட்சன்
குருசேகர தலைவர்

திரு. N.T. பாக்கியராஜ்
குருசேகர பொருளர்
92821 60792

செல்வி N. ரமா ராகேல்
பயிற்சி ஆயர்
73973 98050

திரு. S. கோயில்ராஜ்
குருசேகர செயலர்
98843 26888

மற்றும் சேகரக்குழு உறுப்பினர்கள்

15-8-2026 - சுதந்திர தினம்
23-8-2026 - ஆலப்பாக்கம் ஆலய ஆண்டு விழா
27-8-2026 - விருகம்பாக்கம் ஆலய ஆண்டு விழா
5-9-2026 - ஆசிரியர் தின விழா
27-9-2026 - பெண்கள் ஞாயிறு மற்றும் CSI உருவான தினம்

நமது ஆலய இணையதளம் : www.csivirugambakkam.com

திருமணம் – வாழ்த்துகிறோம்!

Date : 12.06.2026 Place : CSI St. James Church, Ayanavaram
Bridegroom : **Nickson S**
S/o. Samson P & Rachel Anitha P
Bride : **Erlin Joy Anns A**
D/o. Austin Thomas Abraham I & Angelin Regina S



Date : 13.06.2026 Place : CSI Christ Church, Virugambakkam
Bridegroom : **Daniel Joshua**
S/o. M. Jebakumar & J. Vasanthi
Bride : **Praiselin Helena**
D/o. J. Dinesh Benet & D. Christy Pushpalatha



Date : 22.06.2026 Place : CSI St. Paul's Church, Choolai
Bridegroom : **Andrew Samuel**
S/o. Late Anand Ratna Pandian & Mrs. Anita Ratna Pandian
Bride : **Jebasty Sharon Winslet**
D/o. Sathraj S & Jebaselvi S



Date : 23.06.2026 Place : CSI Christ Church, Virugambakkam
Bridegroom : **Sasikumar S**
S/o. Sekar K & Malar S
Bride : **Joyce Thirsha M**
D/o. Manoharan B & Vanaja M



Date : 24.06.2026 Place : CSI Church, Virugambakkam
Bridegroom : **N. Stephen Raj**
S/o. A. Nixon & N. Amudha
Bride : **D. Agnes Jency**
D/o. A. Danielraj & D. Kirubai



Date : 25.06.2026 Place : CSI St Paul's Church, Vepery
Bridegroom : **Dr. I. David Jefrey Christo**
S/o. D. Israel Selvaraj & Christina Israel
Bride : **Dr. C. J. Annie Preetha**
D/o. R. Christopher Jayaraj & R. Gnanaselvi



Date : 10.07.2026 Place : CSI Lesslie Newbigin Church, Redhills
Bridegroom : **A. Joel Paul**
S/o. P. Asirvatham Thavaseelan & M. Sheela
Bride : **R. Annie**
D/o. G. Ranjith Pandiaraj & K. Yameelaa



Date : 13.07.2026 Place : CSI Christ Church, Virugambakkam
Bridegroom : **Jabaraj**
S/o. Pon Kumar & Selvi
Bride : **Jenifer Vinoba**
D/o. Ravi Jacob & Alis Papa



திருச்சபையின் 55வது ஆண்டு விழா வாழ்த்துச் செய்தி

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; அதனால் மகிழ்ந்திருக்கிறோம்" – சங்கீதம் 126:3

அன்பிற்கினிய கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரர், சகோதரிகளே,

நம் ஆண்டவரும் இரட்சருகமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். **CSI** கிறிஸ்து நாதர் ஆலயம், விருகம்பாக்கம் குருசேகரத்தின் **55வது ஆண்டு விழா**வைக் கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான தருணத்தில், எல்லா மகிமையையும் இறைவனுக்கே செலுத்துகிறோம்.

இந்த ஆலயத்தை நிறுவி, பல ஆண்டுகளாக தமது கிருபையால் வழிநடத்தி, எண்ணற்ற உயிர்களை விசுவாசத்தில் நிலைநிறுத்திய ஆண்டவருக்கு நன்றியைச் செலுத்துகிறோம். ஒரு திருச்சபை என்பது வெறும் கட்டிடம் அல்ல; அது கிறிஸ்துவின் சரீரமாகிய விசுவாசிகளின் சமூகம். தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்படும் இடமும், திருவிருந்து கொண்டாடப்படும் இடமும், ஜெபம் உயர்த்தப்படும் இல்லமும், உடைந்த இதயங்கள் ஆறுதல் பெறும் இடமும், அன்பும் சேவையும் வெளிப்படும் சாட்சியுமான இடமுமாக திருச்சபை விளங்குகிறது.

இந்த ஆண்டு விழா, கடந்த காலத்தில் ஆண்டவர் செய்த நன்மைகளை நினைவுகூரும் நாளாக மட்டுமல்ல, எதிர்கால ஊழியத்திற்காக நம்மை மீண்டும் அர்ப்பணிக்கும் நாளாகவும் அமையட்டும். கிறிஸ்துவின் அன்பை எல்லோரிடமும் கொண்டு செல்லும் சாட்சிகளாகவும், சமூகத்தில் நீதி, சமாதானம், இரக்கம் ஆகியவற்றின் கருவிகளாகவும் வாழ நாம் உறுதியேற்போம்.

இந்த திருச்சபையின் அனைத்து முன்னாள் ஆயர்கள், சபை மூப்பர்கள், முன்னாள் செயலர்கள், பொருளாளர்கள், சபைக்குழு உறுப்பினர்கள், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள், இளைஞர்கள், பெண்கள் ஐக்கியம், ஆண்கள் ஐக்கியம், சிறுவர்கள் மற்றும் சிறுமியர் ஊழியங்கள், பாடகர் குழு மற்றும் பல ஆண்டுகளாக அமைதியாக உழைத்த அனைத்து விசுவாசிகளின் அர்ப்பணிப்பான சேவையையும் நன்றியுடன் நினைவுகூருகிறோம். அவர்களின் உழைப்பின் பலனாக இன்று இந்த ஆலயம் விசுவாசத்தின் சாட்சியாகத் திகழ்கிறது.

இன்றைய உலகில் திருச்சபையின் அழைப்பு தெளிவானது: சுவிசேஷத்தை அறிவித்தல், துன்பப்படுவோருக்கு ஆறுதல் அளித்தல், ஏழைகளுக்குச் சேவை செய்தல், நீதிக்காக குரலெழுப்புதல் மற்றும் எல்லா மக்களிடையேயும்

கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துதல். இந்த அழைப்பில் உறுதியாக நிலைத்திருந்து அடுத்த தலைமுறைக்கு உயிருள்ள விசுவாசத்தின் பாரம்பரியத்தை வழங்குவோம்.

ஆண்டவர் இந்த ஆலயத்தின் அனைத்து குடும்பங்களையும், குழந்தைகளையும் இளைஞர்களையும், முதியோரையும், ஊழியர்களையும் வளமாக ஆசீர்வதிப்பாராக.

இந்த ஆலயம் தொடர்ந்து பலருக்கு ஆன்மீக ஒளியாகவும், நம்பிக்கையின் மையமாகவும், சமுதாயத்திற்கு ஆசீர்வாதமாகவும் விளங்க இறைவன் அருள்புரிவாராக.

"என் வீட்டைப் பொறுத்தவரையில், நாங்களோ கர்த்தரைச் சேவிப்போம்"

– யோசுவா 24:15

80வது சுதந்திர தின விழா

இந்தியத் திருநாட்டின் சுதந்திர தினத்தை நாம் நன்றியுணர்வோடு கொண்டாடும் இந்த நேரத்தில், சுதந்திரத்தின் விலையையும், அதனுடன் இணைந்துள்ள பொறுப்பையும் ஆழமாக சிந்திக்க திருச்சபையாக நாம் அழைக்கப்படுகிறோம்.

நமது தேசத்தின் விடுதலை எண்ணற்ற தியாகங்களாலும், அர்ப்பணிப்புகளாலும், நீதிக்கான போராட்டங்களாலும் கிடைத்த இறைவனின் அருள்கொடையாகும். அந்தத் தியாகிகளை நன்றியோடு நினைவுகூர்ந்து நம் நாட்டிற்காக இடைவிடாமல் ஜெபிப்பது ஒவ்வொரு விசுவாசியின் கடமையாகும்.

திருவிவிலியம், **"நேர்மையுள்ள நாடு மேன்மை அடையும். பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடைவும்"** (நீதிமொழிகள் 14:34) என்று அறிவிக்கிறது. ஒரு நாட்டின் உண்மையான மகத்துவம் அதன் பொருளாதார வளர்ச்சியிலோ, இராணுவ வலிமையிலோ அல்ல; மாறாக, நீதி உண்மை, இரக்கம், சமாதானம், மனித மாண்பு மற்றும் அன்பு ஆகிய இறையாட்சியின் மதிப்புகள் நிலைபெறுவதிலேயே உள்ளது.

கிறிஸ்துவின் நற்செய்தி ஆன்மீக விடுதலையை மட்டுமல்ல, மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்திலும் நீதியையும், சமாதானத்தையும், முழுமையான வாழ்வையும், ஏற்படுத்தும் தேவனுடைய அழைப்பாகும்.

தென்னிந்தியத் திருச்சபை, தோன்றிய நாள் முதல் சமூகநீதி, கல்வி, சுகாதாரம், பெண்களின் முன்னேற்றம், குழந்தைகள் பாதுகாப்பு, ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வு மற்றும் மத நல்லிணக்கம் ஆகிய துறைகளில் கிறிஸ்துவின் அன்பைச் செயல்படுத்தி வருகிறது. இந்த மரபை தொடர்ந்து, இன்றைய

தலைமுறையும் நாட்டின் கட்டுமானத்தில் பொறுப்புணர்வோடு பங்கெடுக்க வேண்டும். நமது நாடு இன்று சமூகப் பிளவுகள், மதவெறி, வன்முறை, வறுமை, சுற்றுச்சூழல் சீர்கேடு, ஊழல் மற்றும் ஒழுக்கச் சவால்களை எதிர்கொள்கிறது.

இத்தகைய சூழலில், திருச்சபை சமாதானத்தை உருவாக்கும் கருவியாகவும், நீதியின் குரலாகவும், நம்பிக்கையின் சாட்சியாகவும் விளங்க வேண்டும். "நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்" – மத்தேயு 5:14 என்ற ஆண்டவரின் அழைப்பை நம் வாழ்வில் உண்மையாக்குவோம்.

இந்த சுதந்திர தினத்தில், ஒவ்வொரு திருச்சபையிலும் :

இந்திய நாட்டிற்காகவும், அதன் ஒற்றுமை மற்றும் அமைதிக்காகவும் சிறப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டும். குடியரசுத் தலைவர், பிரதமர், ஆளுநர்கள், முதலமைச்சர்கள், நீதித்துறை, பாதுகாப்பு படைகள் மற்றும் அனைத்து நிர்வாகப் பொறுப்பாளர்களுக்காக ஜெபிக்க வேண்டும். (1 தீமோத்தேயு 2:1–2). இளைஞர்கள் நாட்டுப்பற்று, நேர்மை, பொறுப்புணர்வு மற்றும் சேவை மனப்பான்மையுடன் வளர ஊக்குவிக்கப்பட வேண்டும். மத, மொழி, சாதி வேறுபாடுகளைக் கடந்து அனைவருடனும் அன்பிலும் சமாதானத்திலும் வாழ உறுதியேற்போம். படைப்பைப் பாதுகாப்பதும், ஏழை எளியோரின் உரிமைகளுக்காக நிற்பதும் நமது கிறிஸ்தவ சாட்சியின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும்.

அன்பானவர்களே, சுதந்திரம் என்பது நமக்குக் கிடைத்த உரிமை மட்டுமல்ல; இறைவனுக்கும், நாட்டிற்கும், அண்டை மனிதருக்கும் பொறுப்புடன் வாழும் அழைப்பாகும்.

கிறிஸ்துவில் நாம் பெற்ற விடுதலையை, அன்பின் செயல்கள், நீதியின் சாட்சி மற்றும் தன்னலமற்ற சேவை மூலம் உலகிற்கு வெளிப்படுத்துவோம்.

நமது இந்தியத் திருநாட்டின் மீது இறைவனின் கிருபையும் சமாதானமும் நிலைத்திருக்கட்டும். நம் தேசம் நீதி, ஒற்றுமை மற்றும் செழிப்பில் வளர்ந்து, உலக நாடுகளுக்கு ஆசீர்வாதமாக விளங்க இறைவன் அருள்புரிவாராக.

"நீதியும் சமாதானமும் முத்தமிடும்" – சங்கீதம் 85:10

"ஒன்றுபட்ட சாட்சி – சேவைக்கான அழைப்பு" :

"சமாதானத்தின் கட்டினால் ஆவியின் ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள்". (எபேசியர் 4:3)

தென்னிந்தியத் திருச்சபை உருவான திருநாள் - CSI Day :

அன்பிற்கினிய கிறிஸ்துவுக்குள் சகோதரர், சகோதரிகளே, நம் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

நாம் தென்னிந்தியத் திருச்சபை (CSI) தினத்தை வருகின்ற செப்டம்பர் 27ம் தேதி கொண்டாடவிருக்கிறோம்.

1947ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று, அங்கிலிக்கன், மெதடிஸ்ட், பிரெஸ்பிட்டீரியன் மற்றும் காங்கிரகேஷனல் மரபுகளைச் சேர்ந்த திருச்சபைகள் ஒன்றிணைந்து, உலகக் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு முக்கியமான ஐக்கியச் சாட்சியை உருவாக்கின. அந்த ஐக்கியம் கிறிஸ்துவின் ஜெபமான "அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி" (யோவான் 17:21) என்பதற்கான உயிருள்ள பதிலாகும்.

CSI என்பது ஒரு நிர்வாக அமைப்பு மட்டுமல்ல; அது ஒற்றுமை **(Unity)**, சாட்சி **(Witness)**, சேவை **(Service)** என்ற கிறிஸ்துவின் அழைப்பை வாழ்வாக்கும் விசுவாசக் குடும்பமாகும்.

நற்செய்தி அறிவித்தல், கல்வி, மருத்துவம், சமூகநீதி, பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றம், ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வு, படைப்பைப் பாதுகாத்தல் போன்ற பல துறைகளில் **CSI** தொடர்ந்து சேவை செய்து வருகிறது.

இன்றைய உலகில் பிளவுகளும், வெறுப்பும், அநீதியும் அதிகரித்து வரும் நிலையில் **CSI** விசுவாசிகளாகிய நாம் சமாதானத்தை உருவாக்குபவர்களாகவும், நீதிக்காக நிற்பவர்களாகவும், அன்பை வாழ்வாக்குபவர்களாகவும் அழைக்கப்படுகிறோம். இந்த **CSI** தினத்தில் நாம், திருச்சபையின் ஐக்கியத்திற்காக ஜெபிப்போம்.

நமது சென்னைப் பேராயர், ஆயர்கள், நற்செய்தி பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்காக மன்றாடுவோம். இளைஞர்களை கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு ஆயத்தப்படுத்துவோம். சமுதாயத்தில் கிறிஸ்துவின் ஒளியாகவும் உப்பாகவும் வாழ உறுதியேற்போம். சுவிசேஷத்தையும், சமூகப் பொறுப்பையும் இணைத்து வாழும் **CSI** மரபை அடுத்த தலைமுறைக்கு வழங்குவோம்.

நமது முன்னோர்களின் விசுவாசம், தியாகம் மற்றும் தொலைநோக்குப் பார்வையை நினைவுகூரும் இந்த நாளில், கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையை மேலும் வலுப்படுத்தவும், இறையாட்சியின் மதிப்புகளை உலகில் வெளிப்படுத்தவும் நம்மை மீண்டும் அர்ப்பணிப்போம்.

"ஒரே சரீரமும், ஒரே ஆவியும்... ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்' எபேசியர் 4:4–5

கடவுள் நமது தென்னிந்தியத் திருச்சபையையும், அதன் அனைத்து பேராயங்களையும், சபைகளையும், ஊழியங்களையும் வளமாக ஆசீர்வதித்து, அவருடைய மகிமைக்காக பயன்படுத்துவாராக.

CSI தின நல்வாழ்த்துக்கள்!

திருச்சபை பெண்கள் தின விழா

அன்பிற்குரியவர்களே,

திருச்சபையில் பெண்களுக்கான மாதத்தை நாம் அனுசரிக்கும் இந்த வேளையில், கடவுள் பெண்களுக்கு அளித்துள்ள உயர்ந்த அழைப்பையும் அவர்கள் திருச்சபை, குடும்பம் மற்றும் சமுதாயத்தில் ஆற்றிவரும் அர்ப்பணிப்பான பணிகளையும் நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

பரிசுத்த வேதாகமம் பெண்களை தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மதிப்புமிக்கவர்களாக காண்பிக்கிறது. (ஆதியாகமம் 1:27) பழைய ஏற்பாட்டில் தெபோராள், எஸ்தர், ரூத்து, அன்னாள் போன்ற பெண்கள் விசுவாசம், தலைமைத்துவம் மற்றும் தியாகத்தின் முன்மாதிரிகளாக விளங்கினர். புதிய ஏற்பாட்டில் மரியாள், மார்த்தாள், மரியாள் மகதலேனா, பிரிஸ்கில்லாள், லீதியாள் போன்றோர் நற்செய்திப் பணியில் சிறப்பான பங்களிப்பைச் செய்தனர். இன்றும் நமது திருச்சபைகளில் பெண்கள் ஆராதனை, ஜெபம், கிறிஸ்தவ கல்வி, சுவிசேஷப்பணி, சமூக சேவை, ஏழை எளியோரின் நலப்பணி, குடும்பக் கட்டமைப்பு ஆகிய துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் சேவை திருச்சபையின் வளர்ச்சிக்கும் தேவனுடைய ராஜ்ய விரிவாக்கத்திற்கும் இன்றியமையாததாகும். குறிப்பாக ஆவடி **ஆயல்சேரி ஆலய கட்டுமான பணிக்காக** உதாரணத்துவமாய் கொடுப்போரை வாழ்த்துகிறோம்.

இந்த பெண்களுக்கான மாதத்தில், பெண்களின் கண்ணியத்தையும், உரிமைகளையும் மதித்து, அவர்களின் ஆவிக்குரிய வரங்களையும் தலைமைத்துவத் திறமைகளையும் ஊக்குவிப்போம். குடும்பங்களிலும், திருச்சபைகளிலும், சமுதாயத்திலும் அவர்கள் பாதுகாப்பாகவும், மதிப்புடனும், சம வாய்ப்புகளுடனும் வாழ்வதற்கு நாம் அனைவரும் உறுதிபூணுவோம்.

எல்லா பெண்களும் கடவுளுடைய அன்பிலும் கிருபையிலும் பலப்படுத்தப்பட்டு, தங்கள் அழைப்பில் உறுதியாக நிலைத்து, பலருக்கு ஆசீர்வாதமாக விளங்குவார்களாக. இப்பெண்களுக்கான மாத நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆவிக்குரிய எழுச்சியையும், குடும்ப ஒற்றுமையையும், திருச்சபை வளர்ச்சியையும் ஏற்படுத்த ஆண்டவர் கிருபை செய்வாராக.

கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

ஆயர் இல்லம் :
கிறிஸ்துநாதர் ஆலய வளாகம்
விருகம்பாக்கம், சென்னை - 92
✆ 2364 1934
செல்பேசி : 86100 85248

இறைப்பணியில்
அருட்பணி. D. ஜான் எர்னஸ்ட் டேவிட்சன்
ஆயர் & சேகரத் தலைவர்
Whatsapp : 94449 44441

திருச்சபையின் நிகழ்வுகள்

நமது திருச்சபையில் செயல்பட்டு வரும் தொடக்கப்பள்ளியின் **2026-2027**ஆம் கல்வியாண்டு ஜூன் 4ம் தேதி முதல் தொடங்கப்பட்டது.

ஜூன் 6ஆம் தேதி பேராய நடுநிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான **ஒருநாள் மறு அர்ப்பணிப்பு கூடுகை** நம்முடைய ஆலயத்தில் நடைபெற்றது. இக்கூடுகையில் 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அன்றைய தினம் நம்முடைய திருச்சபையின் சார்பாக அனைத்து ஆசிரியர்களுக்கும் மதிய உணவும் பரிசுகளும் வழங்கப்பட்டது.

கடந்த ஜூன் 11ஆம் தேதி நம்முடைய ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் தலைமையிலும் திருச்சபையாரின் உதாரணத்துவமான காணிக்கைகளாலும் ஜெபங்களாலும் கட்டப்பட்ட படப்பையை அடுத்த சாலமங்கலம் ஆலயம் நம்முடைய **பேராயர்** அவர்களால் இறை ஒப்படைப்பு செய்யப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜூன் 13ஆம் தேதி நம்முடைய திருச்சபையின் **(SCF)** மூத்த குடிமக்கள் குழுவினருக்கான **ஒரு நாள் சிறப்பு கூடுகை** படப்பை குருசேகரத்தில் நடைபெற்றது.

நம்முடைய பெண்கள் ஐக்கிய சங்கத்தின் வழியாக கட்டவிருக்கிற ஆவடி அடுத்த ஆயில்சேரி ஆலய கட்டிடத்திற்கான கல்வெட்டு கடந்த ஜூன் 16ஆம் தேதி வேப்பேரி, **St. Paul's** ஆலயத்தில் நடைபெற்ற ஆயர்கள் கூடுகையில் **பேராயர்** அவர்களால் ஜெபித்து ஆசீர்வதிக்கப்பட்டு ஜூன் 19ஆம் தேதி நம்முடைய **பேராயரம்மா** அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் நம்முடைய பெண்கள் ஐக்கிய சங்கத்தினரும் மற்றும் நிர்வாக குழுவினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜூன் மாதம் முழுவதும் நம்முடைய திருச்சபையின் இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன குறிப்பாக **Flashmob, Love Feast,** ஜூன் 21ஆம் தேதி இளைஞர்களுக்கான ஒருநாள் சிறப்பு கூடுகை மாமல்லபுரம் **SU Retreat Centre**-ல் நடத்தப்பட்டது.

ஜூன் 28ஆம் தேதி வாலிபர் ஞாயிறாக அனுசரிக்கப்பட்டது. அதே போன்று கடந்த ஜூன் 28ஆம் தேதி ஆலப்பாக்கம் ஆலயத்தின் வாலிபர் ஞாயிறு அனுசரிக்கப்பட்டது. ஆராதனைக்கு பின் வாலிபர்களுக்கான சிறப்பு கூடுகையும் நடைபெற்றது. இதில் பாடல் வேலை, துதி ஆராதனை, விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைத்து பிள்ளைகளையும் வாழ்த்துகிறோம்.

ஜூலை 4ம் **தேதி கதீட்ரல் பேராலயத்தில்** நடைபெற்ற பேராயத்தின் நற்செய்தி பெருவிழாவில் தொடக்க விழாவில் நம்முடைய ஆலயத்தின் பாடகர் குழுவினர் **Chicken Stall** அமைத்து சிறப்பித்தனர். அன்றைய தினத்தில் நடைபெற்ற பாடல் போட்டியில் நம்முடைய திருச்சபையின் ஆண்கள் சங்கத்தினரும், பெண்கள் ஐக்கிய சங்கத்தினரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். **மனன வசன** போட்டியில் நம்முடைய ஞாயிறு பள்ளியின் பிள்ளைகளும் திருச்சபையினரும் ஆலப்பாக்கம் ஆலயத்தின் ஞாயிறு பள்ளி பிள்ளைகளும் கலந்து கொண்டது சிறப்புக்குரியது.

ஜூலை 12ம் தேதி நம்முடைய திருச்சபையிலும் ஜூலை 19ஆம் தேதி ஆலப்பாக்கம் திருச்சபையிலும் **நற்செய்தி பெருவிழா** சிறப்பாக நடைபெற்றது. **Stalls** அமைத்த ஐக்கிய குழுக்களுக்கும், தனி நபர்களுக்கும், ஏலத்தில் பங்கு பெற்றவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த ஜூலை 26ஆம் தேதி நம்முடைய குருசேகரத்தின் **2026-2029**ஆம் ஆண்டுக்கான **குருசேகரத் தேர்தல்** மிகவும் சிறப்பான முறையில் சமாதானத்தோடும் நடைபெற்றது. அன்றைய தினம் நம்முடைய சென்னை பேராயத்தின் முன்னாள் **Bishop's Chaplin** மற்றும் நற்செய்தி பணி வாரியத்தின் இயக்குநருமான **Rev. சார்லஸ் பிரபாகரன்** அவர்கள் காலை ஆராதனையில் இறைச்செய்தியை அளித்து, ஆராதனை முடிந்ததும் 30 பேர் கொண்ட குழுவினருடன் வந்து தேர்தல் அதிகாரியாக இருந்து இந்த தேர்தலை நடத்திக் கொடுத்தார்கள். ஐயா அவர்களுக்கும் குழுவினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். முழு தேர்தல் அலுவல்களும் வீடியோ பதிவு செய்யப்பட்டது என்பதையும் தேர்தல் முடிந்ததும் மொத்த வாக்குப்பதிவு தாள்களும் **Seal** செய்து பேராயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பதையும் திருச்சபையாருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

C.S.I. கிறிஸ்துநாதர் ஆலய இறை மக்கள் அனைவரையும் அடியேன் தலைமையில் புதிதாக அமைந்த சேகரகுழு சார்பாக வாழ்த்துகிறேன். 26.07.2026 அன்று நடைபெற்ற நமது ஆலய குருசேகர தேர்தலில் வாக்களித்து எங்கள் குழுவினரை வெற்றி பெறச்செய்த அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி நன்றிகளை தெரிவிக்கிறேன்.

எங்கள் முன் இருக்கக் கூடிய பல்வேறு சவால்கள் :

நடுவீரப்பட்டு கிராமத்தில் வாங்கிய கல்லறைத் தோட்டத்தில் முயற்சி எடுத்து பயன்பாட்டுக்கு கொண்டு வருவோம். விரைவில் நமது ஆலய பட்டா காரியங்கள் நன்மையாக செய்லபட்டு உறுதியாக கிடைக்கும்.

புதிய ஆலய கட்டுமான பணிக்கு தேவையான ஆயத்த வேலைகள் தொடங்கப்படும். இதற்காக சபையார் உதாரத்துவமாக நன்கொடைகள் அளிக்கும்படி கேட்டுகொள்கிறேன்.

ஆகஸ்ட் மாதம் நமது ஆலயத்தின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெறும். நமது ஆங்கில பள்ளியில் ஆகஸ்ட் 15 (சுதந்திர தினம்) கொடியேற்ற நிகழ்வு நடைபெறும். கடந்த மாதம் Mission Festival விற்பனை விழா சிறப்பாக நடைபெற, பங்குபெற்ற, உழைத்த அனைவரையும் வாழ்த்தி நன்றி தெரிவிக்கிறேன். புதிதாக அமைந்துள்ள சேகர குழுவின் உறுப்பினருக்காக ஜெபிக்கவும்.

உங்கள் மேலான ஒத்துழைப்பை அளிக்கும்படி வேண்டுகிறேன்.

நன்றி

இங்ஙனம்

S. கோயில்ராஜ்

செயலர்

தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம்
விருகம்பாக்கம் குருசேகரம்

கிறிஸ்துநாதர் ஆலய முக்கிய நிகழ்வுகள்

15.8.2026 - சுதந்தர தின விழா
23.8.2026 - ஆலப்பாக்கம் ஆலய ஆண்டு விழா
27.8.2026 - விருகம்பாக்கம் ஆலய ஆண்டு விழா
5.9.2026 - ஆசிரியர் தின விழா
27.9.2026 - பெண்கள் ஞாயிறு மற்றும் CSI உருவான தினம்

CHRIST CHURCH

61, Arcot Road, Virugambakkam, Chennai - 600 092

NEWLY CONSTITUTED PASTORATE COMMITTEE MEMBERS 2026-2029

Rev. D.J.E. Davidson
Presbyter & Chairman

1. Mr. S. Koil Raj - *Secretary*
2. Mr. N.T. Packiaraj - *Treasurer*
3. Mr. V. Jeyasingh
4. Mr. Ramesh Arputharaj
5. Mr. J. Rex Paul
6. Mr. D. Wesley
7. Mrs. D. Lidia Hemalatha
8. Mrs. I. Pon Elizabeth Mary Jane
9. Mrs. A. Cathlin Reema
10. Mr. Israel Ebhraim
11. Mr. T. Jerson Immanuel
12. Mr. T. Wilson
13. Mr. Asirvatham Thavaseelan

Fellowship Convener :

1. Men's Fellowship - Mr. Rex Paul
2. Woman's Fellowship - Mrs. Jane Thanraj
3. Youth Fellowship - Mrs. Catheline

Gospel Work

1. Mr. Selva Prasad
2. Mr. Suresh Anbuselvam
3. Mr. Immanuvel
4. Mr. Rukesh Paul
5. Mr. Samvel Jasudassan
6. Mr. Wesley D

Organist

1. Mr. Temple William
2. Mr. M. Martin
3. Mrs. Grace Manohar
4. Mrs. Gracia
5. Mrs. Kalaiyarasi

Christian Tamil Literature Department : Dr. Mrs. Alphonsa
ECO Vision : Mr. Thanraj S
Socio Economic Concern : Mr. Bennett Johnson
Choir In-charge : Mrs. Sherifa Jayakumar
Convener for Dalit & Aadivasi Concern : Mr. Jeyasingh Mani
Young Couple Fellowship : Mr. Samraj Samvel
Mrs. Ponmani Getzi
Sunday School Superintendent : Mr. S. Jayakaran
Sunday School Convener : Mrs. Kency Micheal

Madras Diocese Council :

1. Men - Rex Paul
   Substitute - D. Wesley
2. Women - Lidiya Asirvatham
   Substitute - Jane Thanraj
3. Youth - Jerson Immanuel
   Substitute - Regan Jones

Area Council Members :

1. Men - Micheal Iyyadurai
   Substitute - D. Wesley (K.K. Nagar)
2. Women - Hilda Daffini
   Substitute - P. Shanthi
3. Youth - Paulraj Samvel
   Substitute - Joel Paul A

ஆகஸ்ட் 2026 ஆராதனை ஒழுங்குமுறை, விருகம்பாக்கம்

தேதி	நேரம்	தலைப்பு	வேத பாடம்	செய்தியாளர்
01.8.2026 சனி	காலை 6.30	மாதத்தின் முதல் நாள்	I இரா. 8:33-53 மத்தேயு 25:31-26:16	ஆயர்
02.8.2026 ஞாயிறு	காலை 6.30	இறையியல் கல்வி : திருச்சபையை ஓர் கற்கும் சமூகமாக்கல் குருசேகரக்குழு உறுப்பினர்களின் நியமன ஆராதனை	நெகே. 8:1-12 I கொரி. 14:20-23 சங்கீதம் 1 மத்தேயு 13:16-23	ஆயர்
	காலை 8.30			ஆயர்
	மாலை 6.30			செல்வி ரமா ராகேல் பயிற்சி ஆயர்
08.8.2026 சனி	காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை உபவாச ஜெபம்			
09.8.2026 ஞாயிறு	காலை 6.30	Women Who Trust God : Faithful and Fearless இறைநம்பிக்கையுள்ள பெண்கள் : பற்றுமையுடனும் பயமறியாமலும் திருவிருந்து	II Kings 22:11-20 Rom. 16:1-17 Psalm 18:1-19 Matt. 15:21-28 II இரா. 22:11-20 உரோ. 16:1-17 சங்கீதம் 18:1-19 மத். 15:21-28	Dr. Sugi Kirubakaran
	காலை 8.30			Dr. பால் நாராயணன் சிறப்பு செய்தியாளர்
	மாலை 6.30			Rev. David Poonding National Co-ordinater - HBI
16.8.2026 ஞாயிறு	காலை 6.30	Democracy : Rooted in Justice, Guided by Faith குடியரசு : நீதியில் வேர்கொண்டு நம்பிக்கையில் வளர்த்தெடுத்தல்	Exodus 15:1-8 Acts 15:1-8 Psalm 69:30-36 John 8:31-36 யாத். 15:1-8 அப். 15:1-8 சங். 69:30-36 யோ. 8:31-36	அருட்பணி ஜூலியட் பிரின்ஸ்
	காலை 8.30			ஆயர்
	மாலை 6.30			திரு. பிரின்ஸ்

ஆகஸ்ட் & செப்டம்பர் 2026 ஆராதனை ஒழுங்குமுறை, விருகம்பாக்கம்

தேதி	நேரம்	தலைப்பு	வேத பாடம்	செய்தியாளர்
23.8.2026 ஞாயிறு	காலை 6.30	**Worship : In God's Presence, For God's Purpose**	Isaiah 6:1-8 Acts 2:42-47 Psalm 100 Mark 12:28-34	**Presbyter** English Service
	காலை 7.30	**வழிபாடு : இறை திட்டம் நிறைவேற்ற இறையடி சேர்வோம்**	எசா. 6:1-8 அப். 2:42-47 சங்கீதம் 100 மாற்கு 12:28-34	**சிறப்பு செய்தியாளர்**
	மாலை 6.30			**திரு. சபாஷ் குமார்**
27.8.2026 வியாழன்	காலை 6.30	**Holy Communion - திருச்சபை ஆண்டு நினைவு ஆராதனை**		**ஆயர்**
30.8.2026 ஞாயிறு	காலை 7.30	**திருச்சபை ஆண்டு விழா** **Strangers No More : Welcoming the Migrants and Refugees**	லேவி. 19:9-10,33-37 அப். 8:1-8 சங்கீதம் 146 மத்தேயு 2:13-15	**ஆயர்** **&** **சிறப்பு செய்தியாளர்**
	மாலை 6.30	**இனியும் அந்நியரல்ல : புலம்பெயர்ந் தோரையும் அகதிகளையும் வரவேற்றல்**		**திரு. செல்வபிரசாத்**
1.9.2026 செவ்வாய்	காலை 6.30	**மாதத்தின் முதல் நாள்**	II இரா. 4:18-44; மாற்கு 8:34-9:8	**ஆயர்**
5.9.2026 சனி	மாலை 6.30	**ஆசிரியர் தின வழிபாடு** திருவிருந்து ஆராதனை		**சிறப்பு செய்தியாளர்**
6.9.2026 ஞாயிறு	காலை 6.30	**Education : Shaping Minds, Changing Lives**	ஏசா. 50:4-7 தீத்து. 2:1-10 சங்கீதம் 119:9-16 லூக்கா 5:1-11	**அருட்பணி ஆக்னஸ் பிரின்ஸ்**
	காலை 8.30	**கல்வி : மனதுக்கு உருகொடுத்து வாழ்வுக்கு திசைக்காட்டுதல்**		**ஆயர்**
	மாலை 6.30			**செல்வி ரமா ராகேல்** பயிற்சி ஆயர்

செப்டம்பர் 2026 ஆராதனை ஒழுங்குமுறை, விருகம்பாக்கம்

தேதி	நேரம்	தலைப்பு	வேத பாடம்	செய்தியாளர்
12.9.2026 சனி	மாலை 6.30	**காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை உபவாச ஜெபம்**		
13.9.2026 ஞாயிறு	காலை 6.30	**Identity in Christ Marked by Baptism** **திருமுழுக்கால் குறிக்கப்படும் கிறிஸ்துவின் அடையாளம்**	Gen. 11:7-24 Psalm 32 I Peter 3:18-22 John 3:1-8 ஆதி. 11:7-24 சங்கீதம் 32 I பேது. 3:18-22 யோவா. 3:1-8	**Mr. Ravindharan** English Service
	காலை 8.30			**சிறப்பு செய்தியாளர்**
	மாலை 6.30			**ஆயர்** / திருவிருந்து
20.9.2026 ஞாயிறு	காலை 6.30	**Pluralism :** **Faith and Friendship** **பல்சமயச் சூழல் :** **நம்பிக்கையும் நட்பும்**	எரே. 29:1-7 ரோ. 12:9-18 சங்கீதம் 37:1-24 லூக்கா 11:5-10	**திருமதி ஜூலியட் பீர்ன்ஸ்**
	காலை 8.30			**ஆயர்**
	மாலை 6.30			**திரு. ரவீந்திரன்**
27.9.2026 ஞாயிறு	காலை 6.30	**பெண்கள் ஞாயிறு** **தெ.இ.தி. ஒன்றிப்பு :** **பணியாற்ற ஒன்றிணைதல்** **சி.எஸ்.ஐ. நாள்**	நெகே. 2:17-20 I கொரி. 3:1-15 சங்கீதம் 28 லூக்கா 9:10-17	**Prof. Dr. Vedhakani Vedhanayagam** Gurukul Professor
	காலை 8.30			**சிறப்பு செய்தியாளர்**
	மாலை 6.30			**செல்வி ரமா ராகேல்** பயிற்சி ஆயர்
பிரதி வெள்ளி மாலை 6.30 மணி திருமறை ஆய்வு- Bible Study நடைபெறும்.				

ஆகஸ்ட் 2026 ஆராதனை ஒழுங்குமுறை, ஆலப்பாக்கம்

தேதி	நேரம்	தலைப்பு	வேத பாடம்	செய்தியாளர்
1.8.2026 சனி	காலை 6.30	மாதத்தின் முதல் நாள்	I இரா. 8:33-53 மத்தேயு 25:31-26:16	திரு. ரவீந்திரன்
2.8.2026 ஞாயிறு	காலை 9.00	இறையியல் கல்வி : திருச்சபையை ஓர் கற்கும் சமூகமாக்கல்	நெகே. 8:1-12 I கொரி. 14:20-23 சங்கீதம் 1 மத்தேயு 13:16-23	Dr. சுகி கிருபாகரன்
9.8.2026 ஞாயிறு	காலை 9.00	இறைநம்பிக்கையுள்ள பெண்கள் : பற்றுமையுடனும் பயமறியாமலும் திருவிருந்து	II இராச. 22:11-20 உரோ. 16:1-17 சங்கீதம் 18:1-19 மத். 15:21-28	அருட்பணி ஆக்னஸ் பிரின்ஸ்
16.8.2026 ஞாயிறு	காலை 9.00	குடியரசு : நீதியில் வேர்கொண்டு நம்பிக்கையில் வளர்த்தெடுத்தல்	வி.ப. 15:1-8 அப். 15:1-8 சங். 69:30-36 யோ. 8:31-36	திரு. செல்வ பிரசாத்
22.8.2026 சனி	காலை 6.30	**ஆலய பிரதிஷ்டை தினம்** – திருவிருந்து ஆராதனை		ஆயர்
23.8.2026 ஞாயிறு	காலை 9.00	ஆண்டு விழா வழிபாடு : இறை திட்டம் நிறைவேற்ற இறையடி சேர்வோம்	எசா. 6:1-8 அப். 2:42-47 சங்கீதம் 100 மாற்கு 12:28-34	ஆயர்
30.8.2026 ஞாயிறு	காலை 9.00	இனியும் அந்நியரல்ல : புலம்பெயர்ந் தோரையும் அகதிகளையும் வரவேற்றல்	லேவி. 19:9-10,33-37 அப். 8:1-8 சங்கீதம் 146 மத்தேயு 2:13-15	திரு. பால்சன் Director - Seeshia

செப்டம்பர் 2026 ஆராதனை ஒழுங்குமுறை, ஆலப்பாக்கம்

தேதி	நேரம்	தலைப்பு	வேத பாடம்	செய்தியாளர்
1.9.2026 செவ்வாய்	காலை 6.30	மாதத்தின் முதல் நாள்	II இராசா 4:18-44; மாற்கு 8:34-9:8	திரு. செல்வகுமார்
6.9.2026 ஞாயிறு	காலை 9.00	கல்வி : மனதுக்கு உருகொடுத்து வாழ்வுக்கு திசைக்காட்டுதல்	ஏசா. 50:4-7 தீத்து. 2:1-10 சங்கீதம் 119:9-16 லூக்கா 5:1-11	Dr. சுகி கிருபாகரன்
13.9.2026 ஞாயிறு	காலை 9.00	திருமுழுக்கால் குறிக்கப்படும் கிறிஸ்துவின் அடையாளம் திருவிருந்து	ஆதி. 11:7-24 I பேது. 3:18-22 சங்கீதம் 32 யோவா. 3:1-8	அருட்பணி ஆக்னஸ் பிரின்ஸ்
20.9.2026 ஞாயிறு	காலை 9.00	பல்சமயச் சூழல் : நம்பிக்கையும் நட்பும்	எரே. 29:1-7 ரோ. 12:9-18 சங்கீதம் 37:1-24 லூக்கா 11:5-10	திருமதி பபிதா
27.9.2026 ஞாயிறு	காலை 9.00	தெ.இ.தி. ஒன்றிப்பு : பணியாற்ற ஒன்றிணைதல் சி.எஸ்.ஐ. நாள்	நெகே. 2:17-20 I கொரி. 3:1-15 சங்கீதம் 28 லூக்கா 9:10-17	ஆயர்

Birthday List for August 2026

1.8.2026
Mrs Sonia G
Mr Rajkumar J.C
Master Martin Daniel Ponraj P
Mrs Sujana Roopa Jeyaseeli S
Ms Rashmi kajol E
Ms Sonia Vijayarasi V
Mr James Vellai Pandi P
Mrs Merlin Seharan .
Mr Rajesh Emmanuel D
Baby Irene Melita DSilva M
Mr Joshua Deepak David .
Mr Joshua J
Mr Srinath K
Mr Ravi R

2.8.2026 Sunday
Master Aziel Jack Royce Z
Master Melfred Sylvester S
Mr Vasanth .
Mrs Mary Grace .
Mr Louis Arthur N
Ms Joseline Breeya J
Mr Pravin Kumar J
Mrs Remaly Gracy A

3.8.2026
Mrs Sasi Rekha Abraham
Master Beniel Mahiban C
Mr Abishek Joshua J
Mr Charles Aron Palanikumar K
Mrs Daisy Isaac P
Mr Benny Anderson J
Mrs Frieda Carmel K
Mr Jeyachandran P

4.8.2026
Baby Benita Grace G
Mrs Janet Benilda S
Mr Jaya Prakash D
Mr Edward Gladson .
Dr Jayapalan Kennedy
Mr Kewin Joshuva .

5.8.2026
Mrs Jayasree Mohanraj
Mrs Jayarani V
Mr Samuel Rajkumar J
Mrs Sushila M
Mr George Miller P
Ms Sharon Cynthia V

6.8.2026
Baby Tabitha Kiruba Nikilan
Mr Roshan Heuburt A
Mrs Helen Prakash J
Ms Rachael J
Baby Jeffi Jarrelin J
Mrs Kavitha Prince .
Mr Kingslin Godwin N.K.K.J
Mrs Florence .
Mrs Pushpa Sterlina .

7.8.2026
Mrs Stella Jebarani J
Mrs Jaya Dhanapal
Mr Chandran Joseph T
Ms Stacey Anna S
Mrs Keerthana Priyadharsini E
Mr Philip Nadthaneal E
Mrs Malliga N

8.8.2026
Dr Danny Raj M
Mr Amarnath K
Mrs Vijayarani George .
Mrs Jayaseeli A
Mrs Roslin Beaula W
Ms Debbie Adelaine S
Mr Devasirvatham S
Mrs Julice Prema Justin J
Mr Jio Emmanuel
Mr Jacob Ruthra .

9.8.2026 Sunday
Mr Abraham Prabakar A
Mr Paul Anand S
Mr Augustine G
Mrs Anita Cairlin .
Master Asline Elsa P
Mrs Preethi Raichel .
Mr Kofi Johnson J.S
Ms Rachel Breezi D

10.8.2026
Mrs Catherine Imelda Mary Saro .
Mr Joseph Premkumar Vijaya Thilagan K
Mrs Kavitha S
Ms Anshmitha Katchin .
Ms Ashmitha Pearlin .
Mr Selvaraj S
Mrs Agasta Jayasili G
Baby Candace Chryssy Frederick
Mr Arul Joshua J
Mr Joseph Premkumar Vijayathilagan K

Birthday List for August 2026 Cont. 1

11.8.2026
- Ms Malathy K
- Mr Giri Prabu C
- Mr Samuel Pandian M P
- Mrs Hepzibah Prasanna Amos
- Mr Dass J
- Mrs Jacklin Devi V
- Baby Darris Joy P
- Ms Esther Devanesam J
- Mrs Raji Joseph .
- Ms Mary Diviya Suguna G
- Mrs Shanthini F
- Mrs Priya N.L
- Ms Shaiel Royalin P

12.8.2026
- Mrs Jancy Rani Jacob
- Mr John Christopher A
- Mrs Mercy C
- Mrs Athira S.D
- Mr Sundarsingh Jebaraj D
- Mr Paulo Sijin P
- Mrs Jasmine I

13.8.2026
- Mrs Selvarani A
- Ms Silviya Rajakumari D
- Mr Aaron Edward J
- Mr Peter Calvin Sahayam
- Mrs Pramilaruth B
- Mrs Rebecca Gabriel .
- Mr Emmnauel S
- Master Dylan G
- Mr Daniel A
- Baby Jerly Blessy Andrea B
- Ms Jennita G.S
- Mr Anand David V
- Mr Jaisonraj B

14.8.2026
- Mr Moses A
- Mr Nelson Arputharaj J
- Baby Janet Jemima D
- Mr Dobbin Raj M
- Mr Johnson Samvel W
- Mr Chandra Bose M
- Mr Latchumanan K
- Ms Evangline Kiruba S
- Mrs Daisy Davidson W

15.8.2026
- Mr Thangarajan A
- Ms Bernice Cynthia P
- Dr Devikarani MD

15.8.2026
- Mrs Sureka Samuel .
- Mr Jayaraj J
- Ms Sharon Blessy P
- Mrs Pramila S
- Mr Ezhil Pari A
- Ms Riana Blessy E
- Mrs Brintha Ebenezer .
- Mr Ananda Ruben .C
- Mr Gnanakumar S.A
- Ms Nancy A.G
- Mrs Thelma Sherly .
- Mrs Sheela Jeyasingh
- Master Shiloh Benjamin S
- Mr David Dhinakaran P
- Mrs Sudhanthira Priya P
- Ms Harshita S.P

16.8.2026 Sunday
- Mr Sudhakar F
- Mr Peter Samuel K
- Ms Arathana Yazini B
- Ms Albina Praisy A
- Ms Mary Ann Sneha .
- Mrs Salomi M

17.8.2026
- Master Jarius Levi J
- Mr Paul Ravindran A
- Ms Joanna Grace J
- Mr Abraham Swamidoss M
- Ms Isabel S
- Mr Reagon S
- Mr Kingsly Stenin Singh .
- Mrs Anitha .
- Mr Vincent Vedhanayagam A
- Ms Kiruba Evangeline S

18.8.2026
- Mr Richard Michael M
- Mrs Mercy .J
- Ms Revival .
- Baby Leah Candice A
- Mr Sathish T
- Mr Kissinger George
- Mrs Mary Leninal Yesudhas
- Mr Aruldoss D
- Mr Deepak Manohar T
- Mrs Anitha J
- Mrs Guilda Pushparani J T
- Mrs Anita Solomon .
- Ms Augusta Ponmary .
- Mrs Rani Vijayakumar

Birthday List for August 2026 Cont. 2

19.8.2026
- Mrs Mary Victoria Ravimahan
- Mr Jonathan Marcus Jacob
- Ms Annah A
- Ms Mahalakshmi G
- Ms Jennifer Sally S
- Mr Sherwin Abishraj S
- Master Ryan Zachary P
- Mr Edward Arul Raj A
- Mrs Janci Rani .
- Mr Arun Jebastin Thangaraj T.S
- Mrs Mahalakshmi R
- Master Rakshan R

20.8.2026
- Dr Vivek Shekar
- Mr Mark Immanuel C
- Mr Allen Priyansh Robert A
- Mrs Hilda Mercy P
- Mr Ramesh Arputharaj A
